# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39

## (CHAPTER XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

C.C.No.5/2022

Deposition of witness for Prosecution – PW-3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செபாஸ்டியன் ராபர்ட் | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | குழந்தைசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 4.11.2024.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேட்டுர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். 2016ம் ஆண்டு கொளத்தூர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றி வந்தேன். 16.12.2016ம் தேதி கொளத்தூர் காவல்நிலையத்தில் நான் பணியில் இருந்தபோது காலை 8.30 மணி அளவில் காவல் ஆய்வாளரும் நானும், காவல் உதவி ஆய்வாளர் ராமசாமியும் மற்றும் தலைமை காவலர் திரு.

அர்த்தனாரியும் வாகன தணிக்கை அலுவலாக தண்டா மெயின் ரோடு வெங்கடேசன் வீட்டின் அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தோம். அப்போது அய்யம்புதூரிலிருந்து கொளத்தூர் நோக்கி அதிவேகமாக TN52W 1976 என்ற டிப்பர் வண்டியை ஓட்டி வந்தவரை நிறுத்தி வாகனத்தை சோதனை செய்தபோது வாகனத்தில் அரசுக்கு சொந்தமான செட்டிப்பட்டி ஆற்றுபடுகையிலிருந்து மணல் அள்ளி வந்தது தெரிய வந்தது. மணலை அதிக லாபத்திற்கு விற்பதற்காக கொளத்தூர் பகுதிக்கு வண்டியின் ஓட்டுனர் சின்னதுரை (எ) துரையன் கொண்டு வந்தார். காவல் ஆய்வாளர் விசாரணை செய்ததில் திருட்டுதனமாக அதிக லாபத்திற்கு விற்பதற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அப்போது காவல் ஆய்வாளர் மணலை சோதனை செய்தபோது வண்டியில் ஒரு யூனிட் இருப்பது தெரிய வந்தது. அதன் மதிப்பு ரூ.3000/- என்று தெரிய வந்தது. தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிதான் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆவார். பின்னர் காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் வாகனத்தையும் மணலையும் கைப்பற்றி எதிரியை கைது செய்தார். எதிரியை தடயடங்களுடன் நிலையம் கொண்டு வர ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.